# பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்குப் பரிந்துரைக்கப்பட்ட வேலைத்திட்டம்

# கணிதம்

## தரம் மூன்று (இரண்டாம் தவணை)

2022

முன்பிள்ளைப் பருவவிருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம

**நாட்டின் இடர் சூழ்நிலைக் காரணமாக பாடசாலை மாணவர்களுக்கு கிடைக்கப்பெறாத பாடசாலை நாட்களின் பாடத்திட்டத்தினை நிறைவு செய்து கொள்வதற்குரிய அறிவுறுத்தல் திட்டம்.**

நாட்டின் சமூக பொருளாதார இடர் சூழ்நிலை காரணங்களால் 2022ஆம் ஆண்டுக்கான தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை ஆரம்பப்பிரிவு கல்விப் பிரிவில் கற்கும் மாணவர்களை கருத்திற் கொள்ளும் போது இவர்கள் கல்வி கற்கும் காலத்தை இழந்துள்ளார்கள் என்பது தகவல் பகுப்பாய்வு மதிப்பீடுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மாணவர்கள் இழந்துள்ள கற்றலுக்குரிய காலவேளைகளின் அடிப்படையினை நோக்காகக் கொண்டு அக் கல்வி ஆண்டுக்கான அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகளை அதனடிப்படையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனடிப்படையில் ஆரம்பக் கல்விப் பிரிவின் 1 – 5 வரையான தரங்களுக்கு இரண்டாம் தவணைக்கான கற்பித்தல் உள்ளடக்கங்களின் அத்தியவசியமான பகுதிகள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வத்தியவசியமான பகுதிகள் நிறைவேற்றப்படும் போது இரண்டாம் தவணைக்குரிய கற்றல் சந்தர்ப்பங்களை பெற்றுக் கொடுக்க இலகுவாக அமையும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்ளலாம்.

எவ்வாறாயினும் நாம் முன்வைக்கும் கருத்து யாதெனில் இரண்டாம் தவணைக்குரிய மிகவும் அத்தியவசியமான பாடப்பரப்புக்கள் மாணவர்களுக்கு பெற்றுக் கொடுத்திருப்பின் அவற்றை விடுவித்து அவசியமான தேவையான பாடப்பரப்பில் இருந்து ஆரம்பிக்கலாம்.

ஒவ்வொரு பாடப்பரப்புக்கள் சம்பந்தமாக தேவையான கால அட்டவணையில் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப சுகமான முறையில் மாற்றங்கள் ஏற்படுத்திக்கொள்ள சுதந்திரண்டு மாற்றங்களை ஏற்படுத்தி வாய்ப்பு தரப்பட்டிருப்பினும் பாடப்பரப்புகளை நிறைவு செய்வதற்குரிய பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களையே சாரும்.

ஒவ்வொரு பாத்திற்குமான பொது ஆசிரியர் வழிகாட்டியின் படி அத்தியவசியமானது என குறிக்கப்பட்ட பாடப்பகுதிகள் மாத்திரம் இங்கு உள்ளடக்கப்பட்டிருக்கின்ற தருவாயில் அத் தவணைக்குரியவைகளை பாடப்பரப்பில் அத்தியவசியமான செயற்பாடுகள் மிகவும் இலகுவான முறையில் தெளிவு படுத்தப்பட்டு பின் வீட்டிலிருந்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்த உங்களால் முடியுமாயிருத்தல் வேண்டும்.

தெளிவு படுத்தப்பட்ட செயற்பாடுகள் வீட்டியல் இருந்து செய்வித்தலில் மாணவர்களை எந்த விதத்திலும் இடர் நிலைக்கும் தள்ளப்படக்கூடாது என்பதனையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

எவ்வாறாயினும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் சுமூகம், பாதுகாப்பு, மகிழ்ச்சி இவற்றுடன் மாணவர்களை ஒன்றிணையுங்கள்.
அதன்படி இலங்கை வாழ் ஆரம்பப் பிரிவில் கற்கும் மாணவச் செல்வங்களின் கற்றல் நடவடிக்கைகளை உறுதியுடன் பலனை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இவை அனைத்தயையும் நிறைவு செய்ய எம் அனைவருக்கும் இறைவனின் ஆசியும் அருளும் கிடைக்க பிராத்திப்போம்

## தரம் 3 - கணிதம்

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | விடய உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | 1. 999க்கு மேற்படாத எந்த மூன்று எண்களையும் வரிசைப்படுத்துவார். | • 999 வரையில் எந்த எண் குறியையும் வாசிப்பார்.<br>• 999 வரையில் எண் குறியையும் எண் பெயர்களையும் எழுதுவார்.<br>• 999 வரையில் எண்ணொன்றின் ஒவ்வோர் இலக்கத்தினதும் இடப்பெறுமானத்தைக் கூறுவார்.<br>• 999க்கு மேற்படாத எந்த மூன்று ண்களையும் வரிசைப்படுத்துவார். | • 999 இலும் மேற்படாத எந்த மூன்று எண்களில் இருந்தும் மிகப்பெரிய, மிகச் சிறிய எண்ணைத் தெரிவு செய்தல்.<br>• 999 இலும் மேற்படாத எந்த மூன்று எண்களையும் வரிசைப்படுத்தல். | அலகு 13:<br>செயற்பாடு 01 - 04<br>அலகு 23:<br>செயற்பாடு 01 - 04 | 53 - 59<br><br>99 - 103 | 03 மணி<br><br>02 மணி |

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | விடய உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | 2. தற்போது பயன்பாட்டில் உள்ள ரூ. 500 வரையிலான நாணயக்குற்றிகளையும் பயன்படுத்தி எளிய கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவார். | • ஒரு ரூபாய், இரண்டு ரூபாய், ஐந்து ரூபாய், பத்து ரூபாய் ஆகிய நாணயங்களை இனங்கண்டு அவற்றின் பெயர்களைக் கூறுவார்.<br>• தற்போது பயன்பா-ட்டில் உள்ள இருபது ரூபாய், ஐம்பது ரூபாய், நூறு ரூபாய், ஐந்நூறு ரூபாய் ஆகிய தாள்காசுகளை இனங்கண்டு அவற்றின் பெயர்களைக் கூறுவார்.<br>• ஏதேகும் பொருளுக்கு கொடுக்கும் விலையை நாணயங்களில்/ தாள்காசுகளில் கூறுவாார். | • காசுத் தாள்களையும் நாணயக் குற்றிகளையும் இனங்காணலும் பெயர்களைக் கூறலும். | அலகு 14:<br>செயற்பாடு 01 - 03 | 60 - 62 | 03 மணி |

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | விடய உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | 3. பொது வித்தியாசம் 2, 5, 10 ஆகவுள்ள எண்கோலங்களைக் கட்டியெழுப்புவார். | • பொது வித்தியாசம் 2, 5, 10 ஆகவுள்ள எண்கோலங்களைக் கட்டியெழுப்புவார்.<br>• எண்கோலங்களை இனங்கண்டு அக்கோலத்தினை மேலும் கட்டியெழுப்புவார். | • பொது வித்தியாசம் 2, 5, 10 ஆகவுள்ள எண் கோலங்களைக் கட்டியெழுப்புதல். | அலகு 15: செயற்பாடு 01 - 03 | 63 - 65 | 03 மணி |
| | 4. ஈரிலக்கங்களுக்கு மேற்படாத எண்களை கொண்டு செல்லலுடன் கூட்டும் பிரசினங்களைத் தீர்ப்பார். | • கொண்டு செல்லலுடன் ஈரிலக்கங்களுக்கு மேற்படாத இரு எண்களை கூட்டுவார்.<br>• கொண்டு செல்லலுடன் ஈரிலக்கங்களுக்கு மேற்படாத இரு எண்களை கூட்டும் பிரசினங்களைத் தீர்ப்பார். | • எண்களை கூட்டும் பிரசினங்களைத் தீர்த்தல். | அலகு 16: செயற்பாடு 01 - 05 | 66 - 71 | 05 மணி |

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | விடய உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | 5. திரவங்களை அளக்கும் நியம அலகாகிய லீற்றரைப் பயன்படுத்துவார். | • திரவங்களைஅளக்கும் நியம அலகாகிய லீற்றரைப் பயன்படுத்தி திரவங்களை அளப்பார்.<br>• பாத்திரமொன்று கொள்ளும் திரவ அளவைக் கிட்டிய லீற்றரில் அளப்பார்.<br>• லீற்றருக்கான நியம குறியீட்டை ($l$) பயன்படுத்துவார். | • திரவ அளவுகளை லீற்றரில் அளத்தல். | அலகு 17:<br>செயற்பாடு 01 - 07 | 72 - 75 | 03 மணி |
| | 6. 99க்கு மேட்படாத எண்ணொன்றிலிருந்து அஅதிலும் குறைந்த எண்ணொறைக் கழிப்பார். | • பொருள்களை/ உருக்களைப் பன்படுத்தி 99க்கு மேற்படாத எண்ணொன்றிலிருந்து இன்னொரு எண்ணை கழித்து விடையைக் கூவார்.<br>• 99க்கு மேற்படாத எண்ணொன்றிலிருந்து அதிலும் குறைந்த எண்ணொன்றை கழிக்கும் போது இடப்பெருமானத்தை கருத்திற் கொண்டு கழிப்பார். | • 99க்கு மேற்படாத எண்ணொ ன்றிலிருந்து கழிக்கும் பிரசினங்களைத் தீர்த்தல். | அலகு 18:<br>செயற்பாடு 01 - 04 | 76 - 2 | 04 மணி |

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | விடய உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | 7. தகவல்களை அவதானிப்பதற்காக வரைபுகள் வரைவார். | • பொருள்கள் மூலம் எளிய எண்சார் தகவல்களை வகைக் குறிப்பார்.<br>• எளிய எண்சார் தகவல்களைப் பட வரைபொன்றின் மூலம் வகைக் குறிப்பார்.<br>• எண் சார் தகவல்களுக்கு உரிய தரவுகளை சேகரிப்பார். அட்டவணைப்படுத்துவார்.<br>• சேகரித்த தகவல்களுக்குப் பொருத்தமான தரவுகளைப் படவரைபொன்றின் மூலம் முன் வைப்பார். | • தகவல்களை அவதானிப்பதற்காக வரைபுகள் வரைதல். | அலகு 19: செயற்பாடு 01 - 04 | 83 - 90 | 03 மணி |
| | 8. 10 வரையில் எண்ணொன்றை ஐந்தாலும் பத்தாலும் பெருக்குவார். | • ஐந்தின் வாய்ப்பாட்டை கட்டியெழுப்பி வாசிப்பார்.<br>• பத்தின் வாய்ப்பாட்டை கட்டியெழுப்பி வாசிப்பார்.<br>• பத்து வரயையில் எண்ணொன்றை ஐந்தால் பெருக்கும் போதும் பத்தால் பெருக்கும் போதும் பெறப்படும் விடையைக் கூறுவார். | • 10 வரையில் எண்ணொன்றை ஐந்தாலும் பத்தாலும் பெருக்குதல். | அலகு 20: செயற்பாடு 01 - 02 | 88 - 90 | 03 மணி |

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | விடய உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | 9. தளவடிவங்களைக் கொண்டு கோலங்களைக் கட்டியெழுப்புவார். | • தளமொன்றின் மீது ஒத்த தளவடிவங்களை ஓர் அலங்காரத்துக்கு ஏற்ப வைத்து வெளியினுள் கோலமொன்றைக் கட்டியெழுப்புவார். | • தளவடிவங் களைக் கொண்டு கோலங்களைக் கட்டியெழுப்புதல். | அலகு 21: செயற்பாடு 01 | 91 - 92 | 01 மணி |
| | 10. சமச்சீரான உருக்களைத் தெரிவு செய்வார். | • சமச்சீரான உரு ஒன்றின் பண்புகளை இனங்கண்டு கூறுவார்.<br>• சமச்சீரான உரு ஒன்றை வரைவார/ அமைப்பார்.<br>• சமச்சீரான, சமச்சீர் அற்ற வடிவங்களை தெரிவு செய்வார். | • சமச்சீரான உருக்களை இனங்கண்டு தெரிவு செய்தல். | அலகு 21: செயற்பாடு 02 - 05 | 92 - 95 | 03 மணி |
| | 11. ஈரிலக்கங்களுக்கு மேற்படாத எண்ணொன்றிலிருந்து (மீதியின்றி) இரண்டால் வகுக்கும் பிரசினங்னளைத் தீர்ப்பார். | • 20 வரையில் மீதியின்றி இரண்டால் வகுக்கப்படும் எண்ணொன்றை இரண்டால் வகுப்பார்.<br>• மீதியின்றி இரண்டால் வகுக்கப்படும் ஈரிலக்க எண்ணொன்றை இரண்டார் வகுப்பார். | • ஈரிலக்கங்களுக்கு மேற்படாத எண்ணொன்றி லிருந்து (மீதியின்றி) இரண்டால் வகுக்கும் பிரசினங்னளைத் தீர்த்தல். | அலகு 22: செயற்பாடு 01 - 05 | 96 - 103 | 03 மணி |
| | | | | | மொத்த நேரம் | 36 மணி |